# இன்று பிறந்தார் இளைஞர்களின் இதயநிதி! எவரையும் வெல்வார் எங்களின் உதயநிதி!

ஈரோட்டுப் பெரியார்
எழுப்பிய எரிதழலில்
சுடரெடுத்துப் புறப்பட்டார்
சொல்வேந்தர் அண்ணா!

அண்ணாவின் செந்நாவில்
அகப்பட்ட முத்துகளைச்
சேகரித்துக் கொண்டு
சிலிர்த்துக் கிளம்பினார்
செந்தமிழ்ச் சித்தர் கலைஞர்!

கலைஞரின் வார்ப்படமாய்க்
களங்கள் பலகண்டு
கருத்தியல் வானத்தின்
கதிரவனாய் ஒளிர்கின்றார்
முத்துவேல் கருணாநி ஸ்டாலின்!

மு.க. ஸ்டாலின் எனும்
முழுவீரத் தளபதியின்
தானைக்கும் சேனைக்கும்
தனிப்பெருமை குவிக்கின்ற
ஆணைக்கும் இடமாக
அணிசேர்த்து நிற்கின்றார்
அன்புத் தம்பி உதயநிதி!

**இளைஞர்கள் உள்ளத்தின்**
**எழுச்சி நதியாக**
**தாய்மார்கள் இதயத்தில்**
**தவழும் மதியாக**
**சுய மான உணர்வுகளைச்**
**சுட்டும் விதியாக**
**காலமே வந்து**
**கையளித்த கதியாக**
**கழகத்தின் எதிர்காலக்**
**கனவுகளின் பதியாக**

**மின்னி மிளிர்கின்றார்**
**மேதகு உதயநிதி!**

அண்ணா கலைஞரின்
ஆழ்மனத்து ஒளியாகத்
தளபதியார் திகழ்ந்து
தடங்கண்டு வென்றதுபோல்
தம்பி உதயநிதி
தந்தையின் ஒளிவாங்கிச்
செம்பியனைப் போலச்
செம்மாந்து நிற்கின்றார்!

**ஆறுமுகத் தரிசனத்தின்**
**ஆறெழுத்து மந்திரம்போல்**
**ஏறுமுகத் திருப்பதியின்**
**எட்டெழுத்து மந்திரம்போல்**
**அருந்தமிழர் உச்சரிக்கும்**
**அஞ்செழுத்து மந்திரமாய்**
**ஆகிவிட்டார் தம்பி**
**ஆற்றல்மிகு உதயநிதி!**

விளையாட்டாய் உள்நுழைந்து
விளையாடும் களமல்ல
அரசியல் என்பதனை
அனுபவித்து உணர்ந்ததனால்...

வித்தகனின் கைவாளாய்
வீரமென்னும் மொழிபேசி
புத்தகங்கள் வழியே
புத்தனைப்போல் ஒளிவீசி
வித்தியாச வெளிச்சத்தில்
வீறுநடை போடுகிறார்
விளையாட்டுத் துறையமைச்சர்
வெல்லவே பிறந்தநம்
துணை முதலமைச்சர்!

எதிரிப் படையெல்லாம்
உதிரிப் படையென்று
அதிரும் படிநின்று
அனைத்திலும் தான்வென்று
சதிராடி வருகின்றார் நம்
சங்கத்தமிழ்ப் பேரர்!

**‘இரண்டு படை வந்தாலும்**
**மூன்று படை வந்தாலும்**
**எப்படையும் எங்களுக்கு**
**நூலாம் படைதான்!**
**முப்படையின் ஆற்றலுடன்**
**அப்படைகள் வென்று**
**ஒப்படைப்போம் தலைவரிடம்!**
**மறுபடியும் நமக்குத்தான்**
**மாநிலத்தின் மணிமகுடம்!’**
**என்று**
**அறிவுப்போர் நடத்துகிறார்**
**அன்புத் தம்பி!**

இந்தியத் தாயின்
எழில்முகத்தில் இடப்பட்ட
திலகம்போல் திகழும்
திராவிட மாடல் அரசின்
திசைமானியாகத்
திகழ்கின்றார்...எங்கள்
தென்னாடுடைய தம்பி!

‘சுந்தர வடிவுடைய
சூத்திரச் சூரியன்!
சாந்த குணமுள்ள
சமத்துவச் சந்திரன்!

பொங்குமாங் கடலாகப்
பொங்கவும் தெரிந்த
திராவிடப் புத்திரன்!
ஒரே ஒரு செங்கல்லை
உயர்த்திப் பிடித்துப்
பலரும் வியக்கப்
பலவெற்றிக் கனிகளைக்
கொய்து கொடுத்த
விசித்திரன்!

தவப்பயனாய் வந்து
தமிழர்க்குக் கிட்டிய
தளிர்த்தலைவன்!
சித்தன்னவாசல் சிற்பத்தைப் போல
சித்தரஞ்சன் சாலைச்
செப்பமாய்க் கிடைத்தவன்!

உழைப்பிலே பூத்த
உணர்வாளன்!
புதுக்காலை திறக்கவந்த
பூபாளன்!
கொள்கைக் குன்றெடுத்துக்
குடைபிடித்து நிற்கும்
கோபாலன்!

காவியக் கலைஞர்
கவிமொழியில் சொன்னால்..
‘புறநானூற்றின் பெருமையை
மூடவந்த
புழுதிக் காற்றுகளைப்
புறமுதுகிட்டு
ஓடவிட வந்த’
நாயக நம்பி!
அண்ணாவின் மொழிசொன்னால்
‘நாட்டுக்குக் கிடைத்த
நல்ல தம்பி!’

**வீட்டுக்குக் கிடைத்த**
**விளக்காக**
**நாட்டுக்குக் கிடைத்த**
**இலக்காக**
**நமக்குக் கிடைத்திருக்கும்**
**சங்கநிதி பதுமநிதி**
**சமகாலத் தங்கநிதி**
**தம்பி உதயநிதி!**

அவருக்கு..
இன்று பிறந்தநாள்!
இமயம்போல் குளிரும்
இதயத்தைப் பெற்றவர்க்கு
இன்று பிறந்த நாள்!

**உழைக்கச் சலிப்பவன்**
**மட்டுமல்ல**
**உழைத்துச் சலிப்பவனும்**
**உயர்ச்சி காண முடியாது!**
**உழைப்பில் களிப்பவனே**
**உயரத்தைத் தரிசிக்கும்**
**உரிமைக்கு உரியவன்**
**என்பதைக்**
**கலைஞரின் வாழ்க்கையும்**
**தளபதியின் வாழ்க்கையும்**
**மட்டுமல்ல.. நம்**
**தம்பியின் வாழ்க்கையும்**
**தடங்காட்டி நிற்கிறது!**

வெற்றுக் கோஷங்களில்
விழுந்து புரள்கின்ற
சச்சரவுப் பேர்வழிகள்
சபைகாணத் துடிக்கும்
சரித்திரப் பிழைகளை
அறிவாயுதம் கொண்டுதான்
அழித்தொழிக்க வேண்டுமென்று
அறிவுத் திருவிழா என்னும்
அவதாரம் எடுத்தாரே
அருமைத் தம்பி..

அந்தச் சிலநாள்கள்
அண்ணாவும் கலைஞரும்
ஐயா பெரியாரும்
அறிவாளர் அம்பேத்கரும்
இதயம் சிவந்த



இடதுசாரித் தலைவர்களும்
கருத்தியல் காற்று வாங்கிக்
களித்தார்களே
வள்ளுவர் கோட்டத்தில்..
அந்தச் சாதனைக்கு
அழகான கிரீடத்தைச்
சூட்டி மகிழ்ந்தாரே நம்
சூரியத் தலைவர் தளபதி..
அந்த ஒரு நிகழ்வில்
ஆரியப் படைகடந்த
அறிவுலகப் பாண்டியன்
ஆகிவிட்டார் நம்
அன்பு உதயநிதி!

**‘பூக்கள் நூறு**
**பூக்கட்டும் புவியெங்கும்’**
**என்று புகன்றாரே**
**மதியுகத்து மாவீரர்**
**மாசேதுங்**
**அவர் வழியில்**
**இருவண்ணக் கொடிக்கு**
**எழுபத்தைந்து வயதென்று**
**கலைவண்ணம் மிகுந்த**
**கவின்விழா எடுப்பித்த**
**கலைஞரின் பேரரை,**
**களவெற்றிச் சூரரை**
**என்னென்று போற்றி**
**இறும்பூது கொள்வது!**

வள்ளுவர் கோட்டத்தில்
வாயுரைப் பூக்கள்
எத்துணை மலர்ந்தன
எத்துணை கமழ்ந்தன
எத்துணைச் செவிகள்
இசைவாங்கிக் குளிர்ந்தன!

எத்துணைக் கிளர்ச்சி
இளையோர் உள்ளத்தில்
எழுந்து விழிதிறந்து
எக்காளம் இட்டன!

அத்துணை எழுச்சிக்கும்
அறிவுலக மலர்ச்சிக்கும்
உத்வேக உணர்ச்சிக்கும்
உதயநிதி என்னும்
உற்சாக நிதியன்றோ
ஒருபெருங் காரணம்!

அதனை உணர்த்தித்தான்
அன்று புகழ்மாலை
அழகுறச் சூட்டினார் நம்
ஆருயிர்த் தலைவர்!

காலத்தின் நிறமே
கருப்பு சிவப்பென்றும்
ஞானத்தின் வடிவமே
நம்கழகம் என்றும்
சீலர்கள் முழங்கிய
சிந்தனைத் தெறிப்பில்
வானமே கீழிறங்கி
வள்ளுவர் கோட்டத்தை
வணங்கியது என்றால்...
அதுமிகை அல்லவே!
ஆனந்தம் வழிகிறது
அப்படிச் சொல்லவே!

அற்றைப் போர்வானில்
அறிவகச் சூரியனாய்
அலர்ந்து ஒளிசெய்த
பேரறிஞர் அண்ணா
இளைஞர்கள் மத்தியில்
இயங்கிய போது..
கையெழுத்துக் கேட்கும்
களிறுகளுக் கெல்லாம்
‘அறிவே அரண்’ என்றுதான்
எழுதிக் கொடுப்பாராம்!

‘அறிவு அற்றம் காக்கும்
கருவி’ யென்று
உணர்ந்த கூட்டம்தானே
உடன்பிறப்புகளின் கூட்டம்!
அந்தக் கூட்டத்தை
அதே நாட்டத்தை
இன்றும் வளர்க்கின்ற
எழுச்சித் தளபதியாய்
அன்று தோன்றினார்
அறிவு ஜீவிகளின்
அத்தனை கண்களுக்கும்!
பெண்ணியச் சிந்தனை
படைத்த பெண்களுக்கும்!

**திரும்பும் இடமெல்லாம்**
**தேர்தல் பாதையே**
**தெரியும் தருணத்தில்..**
**விரும்பும் கொள்கையை**
**வென்றெடுக்கும் தினவோடு**
**புதுப்பாதை திறந்த**
**புத்துலகச் சிற்பியை**
**எவ்வண்ணச் சொல்லெடுத்து**
**எங்ஙனம் நான் ஏத்துவது?**

கரும்பு வயலுக்கும்
கற்றாழைப் புதருக்கும்
வேற்றுமை தெரியாமல்



**டாக்டர்**
**எஸ்.ஜெகத்ரட்சகன்**
**எம்.பி.**
*மேனாள் ஒன்றிய இணையமைச்சர்*

விழிப்பது சரிதானா?

ஒளிவட்ட நிலவுக்கும்
ஊமத்தம் பூவுக்கும்
வேறுபாடு புரியாமல்
விழிப்பது முறைதானா?

வண்ண மயிலுக்கும்
வான்கோழி தனக்கும்
வித்தியாசம் விளங்காமல்
விழிப்பது மதிதானா?

ஆளுமைச் சக்திக்கும்
அட்டைக் கத்திக்கும்
பேதங்கள் புரியாமல்
பிறழ்வது முறைதானா?

ஒளிமிக்க வைரத்தை
உப்புக் கல்லோடு
ஒப்பிட்டுப் பார்க்கும்
உள்ளீடு நிறைதானா?

என்கின்ற நோக்கில்
ஏராளப் பகுத்தறிவுப்
பாடங்கள் நடத்தப்
பாடுபடும் தம்பிக்கு..
பக்க பலமாகப்
படைகூட்டும் தளமாகத்
தக்கவர்கள் எல்லாம்
தலைநிமிர்ந்து நிற்கிறோம்!

குருதி அணுக்களில்
குறிக்கோள் சுமந்த
கொள்கைத் தலைவர்கள்
கூடி நிற்கிறோம்!

தீதென்றே தெரியாமல்
திருட்டுத் தனமாக
ஏதொன்று நுழைந்தாலும்
இனங்கண்டு சாய்ப்போம்!

இனப்பகை மொழிப்பகை
இரண்டுக்கும் துணைநிற்கும்
உட்பகை அனைத்தையும்
உறுதியுடன் வீழ்த்துவோம்!

தோற்றோடிப் போனவர்கள்
‘தோல்’மாற்றிக் கொண்டு
வேற்றுருவில் வந்தாலும்
வென்று காட்டுவோம்!

பூ விரிய மதுநுகரும்
பொறிவரிய வண்டைப்போல்
தீ விரியச் சிந்தித்து
தீவிரமாய்த் தொண்டாற்றும்
காவிரியின் பேரனுக்குக்
கடைசிவரை துணையிருப்போம்!

ஓவியம்போல் தெரிந்தாலும்
உள்ளிருக்கும் கனவுகளின்
காவியமாய்ப் புறப்பட்டுக்
களங்காணும் தம்பிக்கு..
ஆயிரமாய்ப் படைதிரட்டி
அரசியல் தலைவர்களின்

அணிவகுப்பைக் காட்டிடுவோம்!
அரசியலை மீட்டிடுவோம்!

**கைகளே கற்பகமாய்**
**கண்களே காமதேனுவாய்**
**திருமுகமே சிந்தாமணியாய்**
**மனோதிடமே வச்சிராயுதமாய்**
**அன்றன்றும் விளைவிக்கும்**
**அறிவுப் புரட்சியே**
**ஆயிரம் கண்களாய்க் கொண்டு**
**ஆட்சி பீடத்தை**
**அலங்கரிக்கும் தளபதியார்**
**அடுத்த முறையும்**
**அமர்வார் அரியணையில்!**

அவருக்குப் பக்கத்தில்..
அறிவுப் புரட்சிக்கு
அணிசேர்க்கும் தம்பி
ஆற்றலின் சிகரமாய்
ஆகாய உயரமாய்..
வியக்க வியக்க
வியப்பே எழும்வண்ணம்
வெற்றிகளைப் பெற்று
வீற்றிருப்பார் என்று
போற்றிசைத்து நின்று
பாமணக்கும் தமிழால்
பல்லாண்டு பாடுகிறேன்!

**வேர்வை வழிய வழிய**
**செந்தமிழ் நாட்டுச்**
**சின்னவர் புகழ்பாடி**
**தேர்தல் களத்தில்**
**தீரமுடன் உழைப்போம்!**

**வெற்றிக் கவரி**
**வீசப்படும் போது**
**வேர்வை உலரட்டும்!**
**அதுவரை தொண்டர்கள்**
**உழைப்பு தொடரட்டும்!**

வாழிய எங்கோன்
வள்ளல் தளபதியார்!
வாழிய எங்கள்
தளபதியின் தளபதியார்!

# வரிப்புலியே வாழ்த்த வா!

## (உதயநிதி பிறந்தநாள் – (நவம்பர் 27)

ஒருகவலை இனியில்லை
பெருங்கழகங் காப்பதற்கு!
ஓராயிரம் வீரர்கள்போல்
தோள்வலிமை பெற்றமகன்!
தேரோடும் திருவாரூர்
சீர்பெருமை பேசுதல்போல்
நீராடும் நங்கையர்க்கோ
நலம்பயக்கும் காவிரிபோல்
வராத மாமணியாய்
வந்துதித்தார் எம் உதயா!
தீராத எம்கவலை
தீர்ந்ததுபார் இவர்வரவால்!

இனிவீராதி வீரரெல்லாம்
வீழ்ந்திடுவர் போர்க்களத்தில்!
தீராத பகைநெருப்பை
மென்றிடுவார்! தின்றிடுவார்!
வென்றிடுவார் கொடும்பகையை!
திராவிடத்தை, கழகத்தைத்
தோள்தூக்கி நடத்திடுவார்!
திராவிடத்துப் புகழ்பேசும்
திண்டோளார் பெரியாரைத்
தமிழ்த்தலைவர் அண்ணாவைத்
தண்டமிழார் கலைஞரையும்
தாரணிக்கே எடுத்தோதத்
தனிப்பெருமை எழுதிடவா!
திராவிடத்துத் திருவிளக்காம்
திருக்குவளை மண்புகழார்
தளபதியார் சாதனையைப்





பார்வியக்கப் பாடிடவா
பண்பாட்டுப் பெட்டகமே!
ஒன்றியத்தின் மனஇருட்டை
அறிவாயுத ஒளிவிளக்கால்
அடலேறே விரட்டிடவா!
ஆர்ப்பரிக்கும் அலைகடலாய்
உலகத்தை நடத்திடவா!
உணர்த்திடவா! உடன்பிறப்பே!
சனாதனத் தர்மத்தைத்
தகர்த்திடவா! பகுத்தறிவே!

மாவீரர் உதயநிதி
மகிமைக்கு நீ விளக்கு!
குறித்துக் கொள் கொள்கையரே!
நெஞ்சத்தில் நிலைநிறுத்து
நெடும்படைக்கே உறுதிசெய்!
வஞ்சகரை வம்பர்களை
வரிப்புலியாய் பாய்ச்சல் செய்!
வாய்ப்பேச்சு வீணர்களை
பொய்யர்களை புரட்டர்களை
புல்லுருவிப் புல்லர்களை
புதைக்கப்போர்களம்தேடு!

ஆர்ப்பரிக்கும் அலைகடலாய்
ஆரியத்தைப் சிதைத்திடுக!
உலகத்தை விழிக்கச்செய்!
உணர்த்திடுவாய் உடன்பிறப்பே!
மாவீரர் உதயநிதி
மணிவேந்தர் பின்தொடரப்
பூநாடும் வண்டுகள்போல்
போர்ப்பரணி பாடிடத்தான்
புறப்பாட்டாய் புலிப்போத்தே!
குலக்கொழுந்தே! கொடிமரபே!
திறம்படைத்த திண்டோளே!
பிறந்தநாள் காண்கின்றார்
மறத்தமிழர் வழிவந்த
மாவீரர் உதயநிதி!
பறந்துவா பரம்பரையே!
போற்றுவோம் பணிஎங்கும்
ஆற்றுவோம்! ஏற்றுவோம்
புவனமெங்கும் புகழ்க் கொடியை!
பல்லாண்டு பாடிடுவோம்
வரியிளையோ வா!வா!வா!..



**கவிஞர் தமிழ்தாசன்**
தி.மு.க தீர்மானக் குழுத் தலைவர்



வேளச்சேரி மேற்கு பகுதி, 178 அ வட்டத்திற்குட்பட்ட பாக பொறுப்பாளர் ஏ.கோபி உடல்நலம் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், அவரின் இல்லத்திற்கு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேரில் சென்று நலம் விசாரித்து, ரூ.50,000 நிதியுதவி வழங்கினார். உடன் பகுதிப் பொறுப்பாளர், வேளச்சேரி வே.ஆனந்தம் எம்.சி., வட்டச் செயலாளர்கள் தே.கோபி, த.பார்த்திபன், பகுதி கழக பொருளாளர் ந.டில்லிகுமார் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்..